Bridge across Kuzhithurai river.

* 747 Q. THIRU J. JAMES: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether there is any proposal to construct a bridge at Thikurichy across the Kuzhithurai river in pacode village, Kanyakumari, district, and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: இது பாக்கோடு கிராமத்தையும் மார்த்தாண்டத்தையும் ஒன்று சேர்க்கும் ரோட்டில் குழித்துறை ஆற்றில் கட்டப்பட வேண்டிய ஒன்று. பாக்கோடு கிராமத்தில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகை இருக்கிறது. கல்லூரிகள், பள்ளிக்கூடங்களுக்குச் செல்லுகிற மாணவர்கள் ஆற்றைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது; ஆற்றில் எப்போதும் ஆறு அடித் தண்ணீர் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அரசு இதுபற்றி மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இப்பாலம் இப்பகுதியில் கட்டப்பட வேண்டாமென்ற முடிவு எதையும் அரசு செய்துவிடவில்லை. தேவையை உணர்ந்து வரும் திட்டங்களில் இப்பணி மேற்கொள்ளப்படும். தற்போது நிதிநிலை காரணமாக உடனடியாக மேற்கொள்ளப்படவில்லை.

தஞ்சை மாவட்ட கூட்டுறவு பால் வழங்கு சங்கம்.

*748 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தின் தலைமை அதிகாரியின் உத்தரவின் பேரில் பாலுக்கு பதிலாக பால் பவுடரை கரைத்து மக்களுக்கு விநியோகிப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இப்படியும் வழங்க அரசு அனுமதித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) தெரியாது. ஆனாலும் பால் உற்பத்தி குறையும் பருவத்தில், பால் பற்றாக் குறையை ஈடு செய்ய பால் பவுடர் கலந்து தயாரிக்கப்படும் நிலைபடுத்தப்பட்ட பால் மற்றும் சத்து மாற்றப்பட்ட பால் விநியோகம் செய்வது எல்லா சங்கங்களிலும் நடைமுறையிலுள்ளது. இவ்வாறு செய்வதற்குத் தடையேதுமில்லை.